**செய்தி வெளியீடு எண்: 798** **நாள்: 15.11.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூபாய் 2500.00 கோடி** மதிப்புள்ள பங்குகள் வடிவிலான 6 ஆண்டு காலங்களுக்கு ரூபாய் 1000.00 கோடி, 7 ஆண்டு காலங்களுக்கு ரூபாய் 500.00 கோடி மற்றும் 8 ஆண்டு காலங்களுக்கு ரூபாய் 1000.00 கோடி மதிப்புள்ள பிணையப் பத்திரங்களை ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை–கோட்டை அலுவலகத்தில் **நவம்பர் 19, 2019** அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து பிற்பகல் 12.00 மணிக்குள்ளாகவும் போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) **நவம்பர் 19, 2019** அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**